மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: செய்தியைச் சொல்வதானால் பெங்களூரு வழக்கையும் இங்கே சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.பி.எஸ்., நீங்கள் சொன்னது தேவையில்லாதது. மற்றதைப் பேசுங்கள். உங்களுக்குத் தெரியாதது இல்லை. சொல்லுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது சரியாக என் காதில் விழவில்லை. *(குறுக்கீடு)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றே என்னுடைய காதில் விழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நேரத்தை பெருமளவிற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆக்கிரமிக்கிறார் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் ஏதோ எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆயிற்றே என்று அனுமதிக்கப்படுவதாக நான் ஏற்கிறேன். அவர் சொன்ன அந்த கடைசி பிரச்சினை, அவர்களே விண்ணப்பம் போட்டுப் பார்த்து அந்த விண்ணப்பத்தை டில்லி ஏற்க மறுத்து, கதவு சாத்தப்பட்ட காரணத்தால், இங்கே வந்து பேசுகிறார் என்று நான் கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-55

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்ட கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப்படும், எதிர்பார்த்துக்கொண்டிருங்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* உங்கள் ஆட்சியிலே நீதிபதிகள். . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: கதவு திறப்பதும், திறக்காததும் எங்களுக்குத்தான் தெரியும்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: உங்கள் ஆட்சியில் நீதிபதிகள்கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை. மத்திய அமைச்சர் ஒருவர் தன்னை மிரட்டியதாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் நீதிமன்றத்திலேயே பகிரங்கமாகத் தெரிவித்தார். அந்த மத்திய அமைச்சர் யார் என்று மக்களுக்குச் சொல்லவில்லை. அவர்மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை.